REGD. NO. M 6311 ★ தனி பிரதி 0—1—0 (7 பைசா) ★ இலவசம் 10 பக்கம் ★ PHONE: 53650

நம் நாடு

திராவிட முன்னேற்றக் கழக தினஇதழ் ★ ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5 | சென்னை: ஆடி 29உ செவ்வாய் (13—8—57) ★ ★ வெளியீடு: ஆடி 30உ புதன் (14—8—57) | இதழ் 51

டிராம்பேயில் யுரேனியம் தொழிற்சாலை

பண்டித நேருவின் தகவல்

★

புதுடில்லி, ஆக. 12—

பம்பாய் அருகே, டிராம்பேயில் ஒரு யுரேனியம் தொழிற்சாலை திறக்கப்படும் என்ற தகவலை பண்டித நேரு மாநிலங்கள் சபையில் தந்திருக்கிறார்.

'இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி தகுதியற்றது'

'ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி என்பது அவசரப்பட்ட முடிவாகும்'

'ஆங்கிலம் தொடர்ந்து நீடிப்பதில் குந்தகம் விளையாது'

டாக்டர் சுநீதிகுமார் சட்டர்ஜி கருத்து

"அகில இந்திய காரியங்களுக்காக, ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி இருக்கலாம் என்று மேற்கொண்ட முடிவு மிக அவசரப்பட்ட முடிவாகும்.

"மேலும், இந்த இந்தி மொழியின் வளர்ச்சிக்கும் பிரச்சாரத்திற்குமாக இந்தியா முழுவதிலுமிருந்து பொதுப் பணம் செலவிடப்படுகிறது; இந்தச் செயல் இந்தி வழங்காத பகுதி மக்களுக்கு ஆத்திரமூட்டுவதில் தவறில்லை.

"சுதந்திர இந்திய மக்களின் நலனுக்கு, ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்துக் கொள்வதானது எந்த வகையிலும் விரோதமானதல்ல; பெரியதும் சிறியதுமான இந்திய மொழிகளுடன் தொடர்ந்து ஆங்கிலம் இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்."

—என்று, டாக்டர் சுனிதிகுமார் சட்டர்ஜி என்ற ஆட்சி மொழிக் குழு (இந்தித் திணிப்புக் குழு) உறுப்பினர், குழுவின் அறிக்கையில் தமது குறிப்பாக வெளியிட்டிருக்கிறார்.

'இந்தித் திணிப்பை தீவிரமாக்கவேண்டும்'

'நிர்வாகத் துறைகள் பல்கலைக் கழகங்கள் சட்ட மன்றங்கள் பலவும் இந்தி மொழி மயமாக வேண்டும்'

இந்தித் திணிப்புக் குழுவின் அறிக்கை

"1965-ம் ஆண்டிற்குள் ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியை அமர்த்துவது சாத்தியமா என்பதை இந்தக் குழு இப்போது தெரிவிப்பதற்கு முடியாது; அதற்கு அவசியமும் இல்லை" என்று, ஆட்சி மொழிக் குழு (இந்தித் திணிப்புக் குழு) தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

இந்த அறிக்கை மக்கள் சபையிலும் மாநிலங்கள் சபையிலும் இன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிக் கூறியுள்ள அந்த இந்தித் திணிப்புக் குழு, மாநில சர்க்கார்களும், மத்திய சர்க்காரும் நாளுக்கு நாள் ஆங்கிலத்திற்குப் பதிலாக, இந்தியின் உபயோகத்தை அதிகரிக்க வேண்டும் என்றும், பல்கலைக் கழகங்கள், நிர்வாகத் துறைகள், சட்ட மன்றங்கள் அனைத்திலும் இந்தியின் உபயோகம் தீவிரமாக வேண்டும் என்றும் கூறியிருக்கிறது.

குழு தனது அறிக்கை முழுவதும், இந்தித் திணிப்பின் வேகத்தை எப்படி அதிகரிப்பது என்பதற்கான யோசனைகளையே வெளியிட்டிருக்கிறது.

"இந்தியாவின் ஆட்சி மொழியாகவோ, மக்கள் வழக்க மொழியாகவோ இனியும் ஆங்கிலம் இருக்கக் கூடாது"

என்றும் குழு கண்டிப்பாகத் தெரிவித்திருக்கிறது.

20 பேரடங்கிய அந்தக் குழுவில் இருவர் மட்டுமே குழுவின் சிபாரிசுகளை எதிர்த்து, தனிக் குறிப்பு வெளியிட்டிருக்கின்றனர்.

சென்னை மந்திரிகள் கேரளம் செல்கின்றனர்

சென்னை, ஆக. 13—

சென்னைக்குக் கேரளத்திலிருந்து தண்ணீர் வசதி கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் முதலமைச்சர் காமராசர், நிதி அமைச்சர் சுப்பிரமணியம், உள்நாட்டு அமைச்சர் பக்தவத்சலம் ஆகியோர், வரும் செப்டம்பர் திங்களில் கேரளம் செல்லுகின்றனர் என்று தெரியவருகிறது.

அங்கு கேரள அமைச்சர்களுடன் கலந்துபேசி ஆவன செய்வார்கள் என்றும், இறுதியாக தென் மண்டலக் குழுவில் முடிவுகள் காணப்படும் என்றும், நீண்டகாலமாக நிறைவேற்றப்பட முடியாமல் தடைப்பட்டுக் கிடக்கும் பரம்பிக்குளம் திட்டமும் நிறைவேற்ற வழிகள் காணப்படும் என்றும் தெரிய வருகிறது.

★

'தயாராக இருக்கிறோம்'

கேரள அமைச்சர் தகவல்

திருவனந்தபுரம், ஆக. 13—

'கேரளத்தின் நலன்களை முக்கியமாகக் கொண்டு, சென்னைக்கு தண்ணீர் தருவது பற்றி கேரளம் எப்போதும் சென்னை அமைச்சர்களுடன் கலந்து பேசவும் முடிவு செய்யவும் தயாராக உள்ளது' என்று, கேரள நீர்ப்பாசன அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

'ஆனால், கேரளத்தின் நலனைப் பாதிக்கும் எந்த முடிவுக்கும் சம்மதிக்க இயலாது' என்றும் அவர் கண்டிப்பாகக் கூறியுள்ளார்.

தனிப்பட்டோர் நடத்தும் விழாக்கள்

சர்க்கார் ஊழியர்கள் பங்குபெறத் தடை

சென்னை, ஆக. 12—

"சர்க்கார் அதிகாரிகள், தனிப்பட்டவர்கள்—சங்கங்கள் நடத்தும் வரவேற்புகள், விழாக்களில் பிரதான புருஷர்களாகக் கலந்து கொள்ளக்கூடாது' என்று, சென்னை சர்க்கார் தடைவிதித்திருக்கிறார்கள்.

இந்த உத்தரவின்படி, சர்க்கார் ஊழியர்கள் மட்டுமல்லாது, ஊழியர்களின் துணைவியர்களும் அத்தகு விழாக்களில் பங்கு பெறுதல் கூடாது என்றும் விதிக்கப்பட்டிருக்கிறது.

கீழ் பவானி திட்டத்தின் மூலம்!

1,95,000 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் வசதி கிடைக்கும்

சென்னை, ஆக. 13—

கீழ் பவானி திட்டத்தின்கீழ் 1957 செப்டம்பர் முதல் 1958 மார்ச்வரை தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அரசாங்க அறிக்கை கூறுகிறது.

தண்ணீர் வசதி சுமார் 1,95,000 ஏக்கர் நிலத்திற்குக் கிடைக்கும் என்று தெரியவருகிறது.

கோபி தாலூகாவில் 38,000 ஏக்கர் நிலத்திற்கும், ஈரோடு தாலூகாவில் 1,17,600 ஏக்கர் நிலத்திற்கும் தண்ணீர் வசதி கிடைக்குமாம்.

குறை கூறுவோருக்கு பண்டாரநாயகா பதில்

கொழும்பு, ஆக. 12—

"தமிழ் மொழிக்கு சிறுபான்மையினரின் தேசிய மொழி என்ற அந்தஸ்து தருவது அதிகாரங்களைப் பரவலாக்குவதற்காகப் பிரதேசக் கவுன்சில்கள் அமைப்பது என்று, தமிழரசுக் கட்சியினருடன், தான் செய்துகொண்ட ஒப்பந்தம், ஒன்றுபட்ட இலங்கை என்ற இலட்சியத்தைக் காப்பாற்றும்" என்று பிரதமர் பண்டாரநாயகா கூறியிருக்கிறார்.

"ஒப்பந்தம் குறித்து இருதரப்பிலும் உள்ள தீவிரவாதிகள் கண்டனம் எழுப்புவதே, ஒப்பந்தம் நடுநிலையானது என்பதை மெய்ப்பிக்கும்" என்றும் பண்டாரநாயகா தெரிவித்திருக்கிறார்.

'மக்களின் கருத்தறியாமல் எதையும் செய்யாதீர்'

'மீறி இந்தியைத் திணிப்பது பெருங் குழப்பத்தையே உண்டுபண்ணும்'

டாக்டர் சுப்பராயன் எச்சரிக்கை

"இந்தி மொழி தகுதி பெறும்வரை, ஆங்கிலமே தொடர்ந்து இந்தியாவின் அரசாங்க மொழியாக நீடிக்கவேண்டும்" என்று டாக்டர் சுப்பராயன் தெரிவித்திருக்கிறார்.

"இந்தி தகுதி பெறும்வரை, ஆங்கிலத்தின் உபயோகத்திற்கு விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் அமுலாகக்கூடாது" என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

"குழுவின் சிபாரிசுகளை மத்திய சர்க்கார் அமுல் செய்யுமானால், அது உடனடியாக இந்தி தெரியாத மக்கள் மீது இந்தியைத் திணிப்பதாகும் என்பதுடன், அது பொது வாழ்வில் பெரும் குழப்பத்தையே உண்டுபண்ணும்" என்றும் டாக்டர் சுப்பராயன் எச்சரித்திருக்கிறார்.

ஆட்சி மொழிக் குழு அறிக்கையில், தனது கருத்து வேறுபாட்டைத் தெரிவித்து அவர் எழுதியுள்ள குறிப்பில் காணப்படுவதாவது:—

"சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், முன்னேற்றம்பெறவும்வேண்டுமானால், ஆட்சிமொழியாக ஆங்கிலம் இருப்பதை மாற்றுமுன் நாட்டின் பொருளாதாரத் தொழில் துறை வளர்ச்சியைக் கணக்கிலெடுத்துக்கொண்டாக வேண்டும்.

"மாநில சட்டசபை உறுப்பினர்கள்தான், அந்தந்தப் பிரதேச மக்களின் பிரதிநிதிகளாவர்; அவர்கள் மூலம் மக்களின் கருத்தை—குறிப்பாக இந்தி வழங்காத பகுதி மக்களின் கருத்தை அறிந்து கொள்ளாமல், இந்தத் துறையில் எந்த நடவடிக்கையையும் டெல்லி சர்க்கார் மேற்கொள்ளக்கூடாது.

"வரப்போகும் நெடுநாட்களுக்கு மக்கள் சபையிலும், சட்டசபைகளிலும் ஆங்கிலமே வழங்கப்படவேண்டும்; இந்தி அல்லது பிரதேச மொழிகளிலும் பேசலாம்.

"மேலும், பல்கலைக் கழகமட்டத்தில், போதன மொழியாகவும் ஆங்கிலம் நெடுங்காலத்திற்கு இருந்தாகவேண்டும்.

"இந்தி போதன மொழியாக வளர்ந்தாலுங்கூட, விஞ்ஞான, தொழில் நுட்பக் கல்வி எல்லாம் ஆங்கிலத்தின் மூலமே கற்பிக்கப்பட வேண்டும்.

"மேலும், அரசியல் பொருளாதாரம் போன்ற பாடங்களும், ஆங்கிலத்தில்தான் போதிக்கப்படல் வேண்டும்.

"மேலும், அகில இந்திய சர்வீசுகளுக்கான பரீட்சைகள் எல்லாம், நெடுங்காலத்திற்கு ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்பட வேண்டும்."

பிரான்சின் இரத்தவெறி

அல்ஜீரியர்ஸ் ஆக. 13—

அல்ஜீரியாவை அந்நியர் பிடியிலிருந்து விடுவிக்க, முயலும் அந்த நாட்டுச் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மீது மீண்டும் பிரெஞ்சு இராணுவம் கடுமையாகத் தாக்குதல் ஆரம்பித்திருக்கிறது.

இதனால் 25 விடுதலைப் படையினர் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 13—8—57 செவ்வாய்

பொல்லாத யோசனை!

தென்னாட்டில்—குறிப்பாகத் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு, வேண்டும்போது கொழுந்துவிட்டெரியக்கூடிய நீறு பூத்த நெருப்பாக—அணைக்க முயன்றும் முடியாத நிரந்தரக் கனலாக இருந்துவருவதை வடநாட்டுப் பெரியவர்கள் அறியாதவர்கள் அல்லர்; மற்றும், இந்தி எதிர்ப்புக்கான அடிப்படையும் அவர்களுக்குத் துலங்கிவிட்ட ஒன்றுதான்.

என்றாலும் தங்களிடத்தில் சிக்கிவிட்ட அதிகார பலத்தால் இந்தி மொழிக்கு வேகவேகமாக ராஜவேடம் கட்டி வருகிறார்கள். இந்த வேடம் கட்டும் வேகத்திற்கு ஒரு நியாய வரம்பு இருக்க வேண்டுமென அவர்களே ஒப்பி, அரசியல் சட்டத்தில் நிர்ணயம் செய்தார்கள். ஆனால் ஆசை வெட்கமறியாது என்பார்கள்!

தகுதியே இல்லாத ஒரு மொழியை அரியாசனத்தில் ஏற்றுவதில் வடநாட்டுப் பெரியவர்கள் கொண்டிருக்கும் மிருகத்தனமான ஆசையால், தாங்கள் நிர்ணயித்த காலவரம்பைத் தாங்களே மீறுவதில் அரசியல் சட்டத்தை மூர்க்கத்தனமாக கற்பழிப்பதில், நாணக்கேடு இருப்பதாக அவர்கள் கருதவில்லை. ஒப்புக்கொள்ளப்பட்ட நியாயங்களுக்கு புதைகுழி தோண்டிவிட்டு, மிகக் கொடிய அநியாயங்களின் பேயாட்டங்களுக்கு 'பதம்' பாடுகிறார்கள்; அந்தப் பதங்களின் பல்லவியே 'இந்தியை நாங்கள் எவர்மீதும் திணிக்கவில்லை' என்பது. பெரியவர்களின் சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள இடைவெளி அளவிட முடியாததாயிருக்கிறது!

வடநாட்டுப் பெரியவர்கள் துணிந்து இழைக்கும் இத்தகைய அருவெறுப்பான கொடுமைகள் தமிழ் நாட்டில் கனலாக இருக்கும் இந்தி எதிர்ப்பை, கொழுந்துவிட்டெரியச் செய்யத்தான் பயன்படும் என்பதை நாம் அவ்வப்போது இங்கு எடுத்துரைத்து வந்திருக்கிறோம்.

இந்தித் திணிப்பில், முறை தவறிய தீவிரமும் வெறியும் காட்டிவருவது போதாது என்று, இப்போது வேறொரு திட்டமும் வடவரால் தீவிரமாக யோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

'இந்தியா'வை ஒன்றாக்குவது என்ற ஏகாதிபத்தியப் பேராசையின் விளைவுதான் இந்த மற்றொரு திட்டமும்.

'இந்திய மொழிகள் அனைத்திற்கும் ஒரு பொதுவான லிபி ஒன்று வேண்டும்' என்று குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்கள் கடந்த கிழமையில் ஆதரவு தந்துள்ள கருத்தையே இங்கு குறிப்பிடுகிறோம். இந்தக் கருத்து ஒன்றும் புதிதல்ல. ஆனால், பொறுப்பற்ற சில வெறியர்கள் வெளியிட்டுவந்த இந்த யோசனையை, பொறுப்புள்ளவர்—நல்லவர் என்று கருதப்படும் டாக்டர் இராசேந்திர பிரசாத் ஆதரித்துப் பேசுகிறாரே என்பதில்தான் நமக்கு வியப்பு.

இந்த யோசனையில் எதிர்க்கப்படவேண்டிய — மறுத்துரைக்கப்படவேண்டிய முதல் அம்சம், 'இந்திய' என்ற அடைமொழிதான்.

'இந்தியா'வில் வழங்கப்படும் மொழிகள் இந்திய மொழிகள் அல்ல; மாறாக, வடநாட்டு ஆரிய மொழிகளும், தென்னாட்டு திராவிட மொழிகளும்தான் வழங்கப்படுகின்றன என்பது 'இந்தியாவைக் கண்டறிந்த' மற்றொரு வடநாட்டுப் பெரியவரான பண்டிதர் ஒப்பியிருக்கிற உண்மையாகும்.

எனவே 'ஏக இந்தியா' என்ற அரசியல் அமைப்பு, இன்று அமுலாகிவரும் நிலப்பரப்பு முழுவதிலும் வழங்கும் எல்லா மொழிகளும் 'இந்திய' மொழிகள் என்று கூறி, அவற்றிற்கு ஒரே பொது லிபி வேண்டும் என்ற யோசனை பொறுப்பற்றது மட்டுமல்ல—விஷமத்தனமானதும்கூட என்பது தமிழ் மக்களின் கருத்தாகும். எனவே, இந்த பொல்லாத யோசனைக்கு, நல்லவர் எனக் கருதப்படும் டாக்டர் இராசேந்திர பிரசாதின் ஆதரவு கிடைப்பது வருந்தத்தக்கதாகும்.

பொதுலிபி வேண்டும் என்ற யோசனையே, வடநாட்டவரின் ஏகாதிபத்தியத்தை தென்னாட்டில் நங்கூரம் பாய்ச்சும் கேவலமான ஆசையின் விளைவு என்னும்போது, அந்த 'லிபி', தேவநாகிரி லிபியாக இருக்கவேண்டும் என்ற யோசனையின் இரண்டாவது கட்டம்பற்றி நாம் விமர்சிக்கத் தேவை இல்லை. இதுபோன்ற யோசனைகள் எல்லாம், வடநாட்டுப் பெரியவர்கள் ஏற்கனவே திட்டமிட்டு செயல்படுத்திவரும் தென்னாட்டின் — திராவிடத்தின் தனித்தன்மையை, அழித்துவிடும் சூழ்ச்சியின் படிப்படியான வளர்ச்சிக் கட்டங்கள் என்றே தென்னாட்டவர் கருதுவர்.

தேவநாகிரி லிபிக்கும், வடநாட்டு மொழிகள் பலவற்றின் லிபிகட்கும் உறவு மிக உண்டு; அவற்றிடையே உள்ள வேறுபாடுகள் குறிப்பிடக்கூடியன கூட அல்ல. ஆனால் தென்னாட்டின்—திராவிட மொழிகளின் லிபிகட்கும், தேவநாகிரி லிபிக்கும் கடுகளவு தொடர்புகூட உறவு அல்ல—கிடையாது. அவ்வாறிருக்க, இந்தத் தென்னாட்டு மொழிகளையும் வடநாட்டு ஆரிய மொழிகளுடன் சேர்த்து 'இந்திய' மொழிகள் எனக் குறிப்பிடுவதும், அவற்றிற்கு ஒரு பொது லிபி வேண்டும் என்பதும் தென்னாட்டவர் அனைவரும் காலந்தாழ்த்தாமல் கண்டித்துக் குரல் தரவேண்டிய குறும்புத்தனமான யோசனைகளாகும். இந்த யோசனைகளின் பின்னால் பதுங்கிக் கிடக்கும் வடநாட்டுப் பெரியவர்களின் ஏகாதிபத்தியப் போராசையின் மீது ஒன்றும் பனி மூடியிருக்கவில்லை.

நல்லவர் எனக் கருதப்படும் டாக்டர் இராசேந்திரப்பிரசாத் போன்றவர்கள், இதுபோன்ற யோசனைகளுக்கு தங்களின் ஆதரவை நல்குவது, அவர்களை இதர வடநாட்டு வெறியர்களிடமிருந்து பிரித்துக்காட்ட—தனித்துக் காட்ட உதவாது; மாறாக அவர்களை 'நேர்மையானவர்கள் போல நடிப்பதில் அலாதியான பிரீதி கொண்டவர்கள்' என்றே தமிழ் மக்களின்கண்களுக்குக்காட்டும்.

'ஆங்கிலம் அயலிடத்து மொழியல்ல'

'சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தது'

'தென்னாட்டைப் பொறுத்து தேவநாகரி லிபி கஷ்டமானதாகும்'

"நாட்டிலுள்ள மொழிகளுக்கெல்லாம் தேவநாகரி லிபியைப் பொதுவாகக் கையாண்டால் தேச மொழிகளைக் கற்றுக்கொள்வதற்கு எளிதாக இருக்குமென்று ஜனாதிபதி தமது அபிப்பிராயத்தைச் சொல்லியிருக்கின்றார்.

"சொந்த லிபியைத் தவிர்த்து, பொது லிபி ஒன்றும் வழக்கத்தில் இருந்தால் நல்லதே; தேவநாகரி லிபி உபயோகிப்பாளர்களுக்கு அது சுலபமானதாக இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் இதர வரி வடிவங்களை உபயோகிப்பவர்களுக்கு அது அவ்வளவு சுலபமானதாக இருப்பதில்லை.

"இந்தியில் பேச்சைக் கற்பதைவிட எழுத்தைப் பழகுவதுதான் கடினமாயிருக்கின்றதென்பது பலருடைய கருத்தாய் இருக்கின்றது; தென்னாட்டைப் பொறுத்தவரைக்கும் இது நியாயமானதாகவே காணப்படும்.

"இன்றைய நிலையில், ஆங்கில மொழிகு நமது நாட்டில் முக்கியமானதொரு ஸ்தானம் இருக்கின்றது. நமது பழைய ஆட்சியாளர்களுடைய மொழி என்று அதைப் புறக்கணித்துவிட முடியாது. அந்த மொழி இங்கிலாந்து மக்களுடைய தனி உடமையல்ல. அது சர்வதேச முக்கியத்துவம் உடையதாகவும், இங்கிலாந்து தவிர இன்னும் பல பெரிய நாட்டினர்களுடைய தேசிய மொழியாகவும் இருக்கின்றது. ஆங்கிலத்துக்கு மட்டுமேயன்றி, இன்னும் பல ஐரோப்பிய நாட்டு மொழிகளுக்கும் பொது வரிவடிவாகப் பயன்படுவது ரோமன் லிபி; அது கற்பதற்கும், எழுதுவதற்கும் மற்ற லிபிகளைவிடச் சுலபமானது.

"நமது தேசத்திலுள்ள பள்ளிகளில் எல்லாம் ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது. படிப்பவர்கள் எல்லாம் ரோமன் லிபியைத் தெரிந்திருப்பார்கள். எனவே, அதை நாட்டு மொழிகளுக்கெல்லாம் பொதுவான ஒரு லிபியாகப் பயன்படுத்தினால், ஆங்கிலத்தோடு சேர்த்து ஒரேவகையான லிபி மூலம் நமது நாட்டு மொழிகளையும் கற்றுக்கொள்வதற்கு வசதி இருக்கும்.

"பல ஆண்டுகளுக்கு முன்பே நேருஜியும், நேதாஜியும் போன்றவர்கள் ரோமன் லிபியின் உபயோக சௌகரியத்தை வற்புறுத்தியது உண்டு; அவர்களுடைய கருத்து நன்கு சிந்திக்கப்படுவதற்கும் ஏற்கப்படுவதற்கும் உரியதாக இருக்கும் என நம்பலாம்.

"மொழி, கலைகள், அறிவியல் போன்றவைகளில் சீர்திருத்தங்களோ, முன்னேற்றமோ வெறும் உணர்ச்சிகளின் அடிப்படையில் மட்டும் அமைவதென்பது சரியல்ல; ஆய்ந்து தெளிந்த முடிவுகளைச் சார்ந்தே அவை பெரும்பாலும் ஏற்பட வேண்டும்.

"தேசிய ஒற்றுமையையும், சர்வதேசத் தொடர்புகளையும் கருதி நமது நாட்டு மொழிகள் ரோமன் லிபியைப் பொது வரிவடிவாக உபயோகிப்பது நமக்குச் சாதகமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆங்கிலமோ ரோமன் லிபியோ இந்தியாவுக்கு அயலிடத்தவை என்கின்ற அபிப்பிராயமும் மாற வேண்டும்.

"இந்தியப் பிரஜைகளில் ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பவர்களும் இலட்சக்கணக்கில் இருக்கின்றார்கள் என்பதை நாம் மறக்கவோ, மறுக்கவோ இயலாது."

இவ்வாறு, 8-8-57 'நவ இந்தியா' (சென்னை) இதழ், தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

ஆழியின் ஆழம்காண!

70 கப்பல்கள் ஈடுபடும்

'நீராழம் கண்டாலும் நெஞ்சாழம் காணமுடியாது' என்று ஒரு பழமொழி உண்டு. நெஞ்சத்தைப் போலக் கடலும் பல மர்மங்களை உள்ளடக்கி வைத்திருக்கிறது. கடலின் நீர் மட்டம் எவ்வளவு? பசிபிக் கடலின் வடக்கிலும் தெற்கிலும் கோடை காலத்தில் நீர்மட்டம் உயர்வதேன்? பனி நிறைந்த துருவப் பிரதேசத்துக் கடல்களிலிருந்து கடலின் அடியோரமாக பூமத்திய ரேகை வரை வந்து திரும்பும் நீர் மட்டங்களின் வேகம் என்ன?

இவற்றையெல்லாம் இப்போது விஞ்ஞானிகள் ஆராயப்போகிறார்கள். இந்த ஆராய்ச்சிக்காக 27 நாடுகளிலிருந்து 70 கப்பல்கள் புறப்படும்.

கடல் ஆழத்திலே ஓடுகின்ற நீரோட்டங்களைப் பற்றியும் அவர்கள் ஆராய்ந்து அறிவார்கள்.

வடமுனையிலும் தென்முனையிலும் தண்ணீர் மாறிடும்போது, குளிர்ந்த தண்ணீர் கடலின் அடியில் தாழ்ந்து, கடலின் தரைமட்டத்தின் ஓரமாக பூமத்திய ரேகைப் பகுதிக்கு நகர்ந்து செல்கிறது. இதுதான் நீரோட்டம்.

இந்த நீரோட்டங்களைப் பற்றி நன்கு அறிந்தால், நெடுநாள் கழித்துத் தோன்றப்போகும் வானிலையை முன்னறிவிப்பதற்கு வசதியாக இருக்குமாம். வானிலைக்கு இந்தக் குளிர் நீரோட்டங்களும் ஒரு காரணமாகும்.

கடல் நீர் இவ்வாறு இந்த நீரோட்டங்களால் மேலும் கீழுமாய் மாறிப் புரள்வதைப் பொறுத்ததே அங்கு கிடைக்கக்கூடிய மீன் முதலிய உணவுப் பொருள்களின் அளவுமாகும்; ஆகவே, ஆழ்கடல் அடியில் ஓடும் நீரோட்டங்களைப் பற்றி அதிகமாய் அறிந்தாலன்றி, கடலில் கிடைக்கக்கூடிய உணவின் அளவு தெரியாது.

சர்வதேச பூமி பௌதிக ஆராய்ச்சியில் ஒத்துழைக்கும் நாடுகளின் தொகை 60-க்கும் மேலாகும். இந்த ஆராய்ச்சியால் காண்பவை அனைத்தும் உலக நாடுகள் ஒவ்வொன்றுக்கும் தெரிவிக்கப்படும்.

மக்கள் தொகை மிக்க நகரம்

உலகிலேயே டோக்கியோ முதலாவதாம்!

உலகிலேயே மக்கள் தொகை மிக்க நகரம் ஜப்பானின் தலைநகரான டோக்கியோதானும்!

ஆனால் இந்த நிலை, டோக்கியோ கவர்னரான செய்சிரோ யாசுகிக்கு மகிழ்ச்சி தருவதாக இல்லையாம்!

இந்த நகரத்தின் மக்கள் தொகை குறைவதையே அவர் விரும்புகிறாராம்!

அவர் பதவி ஏற்ற 1947-ம் ஆண்டில், டோக்கியோவின் மக்கள் தொகை, 34,00,000 என்றும், இப்போது 84,71,637 என்றும், லண்டன் நகரின் மக்கள் தொகைகூட 83,46,000-தான் என்றும் கூறப்படுகிறது.

நகரின் இன்று மிகச் சிக்கலான பிரச்சினை எல்லாம், இத்தனை மக்களுக்கும் போக்கு - வாத்து வசதி செய்துதருவதுதான் என்றும், ஏற்கனவே நகரம் மிக அதிகமான தொழிற்சாலைகளையுடையதாயிருப்பதால், தொழில்கள் அங்கு நிறுவுவது இனி கட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்றும் கவர்னர் கருகிறாராம்!

முதல் திட்டத்தால் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை

செலவழித்தத் தொகையில் பாதியளவே பலன்தந்தது

போக வழியில்லாத மாடி வீடு போலாகிவிட்டது திட்டம்

'மன்றம்' தரும் மதிப்பீடு

"மாடி வீடு கட்டப்பட்டது; மாடியும் இருக்கிறது; ஆனால் அங்குபோக வழியில்லை; காரணம் படிக்கட்டுகள் வைக்கப்படவில்லை.

"அதைப்போல முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிக்கப்பட்டது; அதில் சில திட்டங்கள் உருவாகிவிட்டன. ஆனால், போட்ட திட்டங்களின் பலன் மக்களுக்குக் கிடைக்கும் வகையில் இல்லை.

"நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் இருக்கின்றன; மற்றொரு புறத்தில், அதை அடையவேண்டிய மக்கள் இருக்கின்றனர்; ஆனால் இரண்டுக்கும் தொடர்பு உண்டாக்கப்படவில்லை.

"ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வடநாட்டில் பெரும் அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள் எல்லாம் போடப்பட்டன. திட்டத்தைப் போடும்பொழுது ஒவ்வொரு அணைக்கட்டைப் பற்றியும் பிரமாதமாக அரசாங்கத்தினர் புகழ்ந்தனர்; 'நானூறு அடி உயரம்—நாற்பது சதுர மைல் பரப்பு—அதன் தண்ணீரைக் கொண்டு நான்கு இலட்சம் ஏக்கராக்களைப் பயிரிடலாம்'—என்றெல்லாம் கணக்குப் போட்டுச் சொன்னார்கள். அவர்கள் போட்ட திட்டங்களில் ஒன்றிரண்டு நிறைவேறியுள்ளன; அதனால், எதிர்பார்த்த அளவு பலன்கள் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள பலன்களும் சரியானபடி உபயோகத்துக்கு வரவில்லை.

"ஒரு அணைக்கட்டு கட்டப்பட்டால், அதனால் தண்ணீர் தேக்கப்படுகிறது. தேக்கப்பட்ட தண்ணீரைப் பிரித்துக் கொடுக்க சரியான கால்வாய்களைத் திட்டத்தின்கீழ் செய்து முடிக்கவில்லை. மாடி கட்டி அதற்குப் படிக்கட்டுகள் வைக்காததுபோல், ரூ. 100 கோடி, ரூ. 150 கோடி என்று போட்டு பெரிய அணைக்கட்டுகளைக் கட்டிவிட்டார்கள்; ஆற்று நீர் தேக்கப்பட்டுவிட்டது; தேக்கப்பட்ட நீர் அப்படியே இருக்கிறது; அதைப் பல பிரிவுகளில் பிரித்துக் கொடுத்தால்தான் நிலங்களுக்குப் பாய்ந்து, விளைச்சல் அதிகரிக்கும்.

"கால்வாய்கள் இன்னும் உண்டாக்கப்படாத காரணத்தால், போடப்பட்ட அணைக்கட்டுகள் வீணாக நீரைத்தேக்கி, பின், பழைய ஆற்று வழியாகத் திறந்து

(4-ம் பக்கம் பார்க்க)

கழக வீரர் தாளமுத்து கொலை வழக்கு

திருவைகுண்டம் நீதிபதி முன் விசாரணை

உடனிருந்த தோழர் ராஜாவின் சாட்சியம்

தூத்துக்குடி தி. மு. கழகத் தோழர் தாளமுத்து கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக நீதிராசன், செந்தூர், ராமனாதன், செந்தூர்பாண்டியன், செல்லையா, அருணாசலம், எஸ். நடராஜன், சேசையா, சேவியர், அதிரசம் என்ற ராஜபாண்டியன் ஆகிய 10 பேர் மீது தொடரப்பட்ட வழக்கு சிவைகுண்டம் சப்-மாஜிஸ்திரேட் முன்பு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தாளமுத்துவுடன் சென்று கொண்டிருக்கையில் வெட்டுப்பட்ட டெய்லர் ராஜா போலீஸ் தரப்பில் முதலாவது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். சர்க்கார் வக்கீலின் கேள்விகளுக்குப் பதிலளித்து அவர் சொன்னதாவது :—

"என் சொந்த ஊர் தூத்துக்குடி. தையல் கடைகளில் வேலை செய்வது என் தொழில். நான் தூத்துக்குடி திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினன்; தூத்துக்குடி தி. மு. கழகம் இரு குழுக்களாகப் பிரிந்து இருந்தது. காலஞ்சென்ற கே. வி. கே. சாமி ஒரு குழுவின் தலைவர். தங்கப்பழம், லாரி பெருமாள் ஆகியோர் இன்னொரு குழுவின் தலைவர்கள்.

"நானும் தாளமுத்துவும் கே. வி. கே. சாமி குழுவைச் சேர்ந்தவர்கள்; 20—9—56-ல் சாமி கொலை செய்யப்பட்டார். சாமி கொலை வழக்கில் சர்க்கார் தரப்பிலும் கிராம அதிகாரி ஆறுமுகம் பிள்ளை கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டப்பட்டவர்களுக்காகவும் தாளமுத்து வேலை செய்தார்.

"நீதிராஜன், செந்தூர் உள்பட குற்றஞ்சாட்டப்பட்ட 10 பேரையும் எனக்குத் தெரியும். இவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். லாரி பெருமாளின் ஆதரவாளர்கள்.

"கே. வி. கே. சாமி கொலை வழக்கு நெல்லை செஷன்ஸ் கோர்ட்டில் நடைபெற்ற சமயம், 15—1—57-ந் தேதி சாட்சிகளை கூப்பிடப் போனபோது, தாளமுத்துவை நீதிராஜனுடைய ஆட்கள் தாக்கினார்கள். இதைக் கேள்விப்பட்டதும் சாமியின் ஆட்கள் (தாளமுத்து ஆதரவாளர்கள்) பதிலுக்கு நீதிராஜனைத் தாக்கினார்கள். இது சம்பந்தமாக எனக்கும் மற்றும் 8 பேருக்கும் 4 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பப்பட்டது.

"கே. வி. கே. சாமி கொலை வழக்கில் 4 பேர் தவிர—தங்கப்பழம் உள்பட மற்றவர்கள் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் சர்க்கார் அப்பீல் செய்து இருக்கிறது. சர்க்கார் தரப்புக்கு உதவியாக, தாளமுத்து, சென்னைக்குப் போனார். வழக்குக்கான விஷயங்களில் தாளமுத்து உதவியாக இருந்தார். அதனால் தாளமுத்துவின் மீதும் அவருடன் சேர்ந்து வேலை செய்த என்மீதும் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் விரோதமாக இருந்தார்கள்.

"அப்பீல் தாக்கல் செய்யப்பட்டபின் இரகசிய போலீஸ் ஹெட்கான்ஸ்டபிள் ஒருவர் தாளமுத்துவிடம் வந்து, 'சாமி கொலை வழக்கில் விடுதலை ஆனவர்களின் வீடு எங்கே?' என்று கேட்டார்; 'சம்மன்' கொடுப்பதற்காக அவர்களைத் தேடினார்.

"உடனே தாளமுத்து என்னை அந்த ஹெட்கான்ஸ்டபிளுடன் அனுப்பினார். நானும், அவரும், இன்னொரு போலீசாரும் போனோம். 19—5—57-ந் தேதி அவர்களைப் பார்க்க முடியவில்லை. 20-ந் தேதி பெருமாள், தங்கப்பழம் ஆகியோருக்கும், 21-ந் தேதி லாரி-பெருமாள், பாண்டித் தேவர் ஆகியோருக்கும் சம்மன்கள் கொடுக்கப்பட்டன.

"20, 21-ந் தேதிகளில் அதிரசம் ராஜபாண்டியனும், நீதிராஜனும் எங்களைப்பின்தொடர்து கவனித்தார்கள்,

"22—5—57-ந் தேதி காலை 8 மணிக்கு வழக்கம்போல தாளமுத்துவின் வீட்டிற்குச் சென்றேன். தாளமுத்து தூத்துக்குடி ஸ்பின்னிங் மில்லில் வேலை பார்த்து வந்தார். அன்று (22—5—57ல்) லீவில் இருந்தார். 25, 26-ந் தேதிகளில் கட்சி (தி. மு. க.) நிதிக்காக நாடகம் நடத்தப்படுவதாக இருந்தது; அந்த நாடக டிக்கெட்டுகளை எங்கெங்கு விற்பது என்பது பற்றி பேசிக்கொண்டிருந்தோம்.

"சுமார் 9 மணிக்கு புதியம்புத்தூர் தி. மு. கழக செயலாளர் துரைசாமி தாளமுத்துவின் வீட்டிற்கு வந்தார். 26—5—57-ந் தேதி தூத்துக்குடியில் தி. மு. க. எம். எல். ஏ; சத்தியவாணிமுத்து அம்மையார் பேசுவதாக இருந்தது. தூத்துக்குடிக்கு சத்தியவாணிமுத்து அம்மையார் வரும்போது புதியம்புத்தூருக்கும் வர ஏற்பாடு செய்ய தூத்துக்குடி தி. மு. க. செயலாளர் ஜோசப்பிடம் சொல்லி தாளமுத்து உதவி செய்ய வேண்டும் என்று துரைசாமி கேட்டார். 'நாங்கள் இப்போது நாடக டிக்கெட் விற்பதற்காக போகிறோம்; நீங்களும் வாருங்கள், ஜோசப்பைக் கண்டு பேசலாம் என்று துரைசாமியிடம் தாளமுத்து கூறினார். பிறகு மூவரும் வீட்டைவிட்டுப் புறப்பட்டு கிரேட்காட்டன் ரோட்டில் வந்து கொண்டிருந்தோம். மார்த்தாண்டம்பட்டி சத்திரத்துக்கு அருகே காற்றுடி-சுப்பிரமணியத்தின் தந்தை மாடாசாமி வந்தார். மகன் சம்பள விஷயமாக தாளமுத்துவிடம் மாடசாமி பேசினார்.

"தாளமுத்து, 'ஸ்பின்னிங் மில்' தொழிலாளர் சங்கச செயலாளராக இருந்தார்.

"இப்படிப் பேசிக்கொண்டே கிரேட் காட்டன் ரோடில் தெற்குப்புறமாக தபசு மண்டபத்துக்கு 40 கெச தூரத்தில் வந்துகொண்டிருந்தோம். நான் முன்னாலும், தாளமுத்து என் பின்னும், மாடசாமியும் துரைசாமியும் 'பிளாட்பார'த்திலும் போய்க்கொண்டிருந்தோம். திடீரென்று 'வெட்டு! குத்து!' என்ற சத்தம் கேட்டது; திரும்பிப் பார்த்தேன். நீதிராசன் முதலிய 10 பேர் இருந்தார்கள்.

"செந்தூர் பாண்டியன், ராமநாதன், நீதிராசன், ஆகியோரிடம் சூரிக் கத்தியும், நடராசனிடம் வாளும், மற்ற 6 பேர்களிடம் அரிவாளும் இருந்தன.

"சத்தம் கேட்டுத் திரும்பித் திரும்பிப் பார்க்கும்போது, ராமநாதன், செந்தூர்பாண்டியன் ஆகியோர் தாளமுத்துவை சூரிக் கத்தியால் குத்தினார்கள்; குத்து விழவும், 'அம்மா' என்று அலறியபடி திரும்பினார்; அப்போது செல்லையா, தாளமுத்து வின் வலது கையில் வெட்டினார்; உடனே நீதிராசன், தாளமுத்துவின் மார்பில் கத்தியால் குத்தினார்; நீதிராசன் குத்தியதும் தாளமுத்து தெற்கே தலையும்—வடக்கே காலுமாக கிழக்கு பார்த்து கீழே விழுந்தார்.

"கீழே விழுந்த தாளமுத்துவின் வலது தொடையில் செல்லையா வெட்டினார்; செந்தூர் பாண்டியன் இடது தொடையில் வெட்டினார்; அப்போது சேசையா, சேவியர், அருணாசலம் ஆகிய மூவரும் 'வெட்டு, குத்து' என்று சத்தம் போட்டார்கள். அதிரசம்என்ற இராசபாண்டியன் என்னை (ராசா) இடது கையில் வெட்டினார்; நடராசன் என்னை ஓங்கி வாளால் வெட்டினார்; நான் திரும்பியதால் வெட்டு தப்பி வாளின் முனை முன்மார்புக்குக் கீழ்ப்பக்கம் பட்டு காயம் உண்டாக்கியது (காயத்தை கோர்ட்டாரிடம் காட்டினார் ராசா !)

"அப்போது காலை சுமார் 10 அல்லது 10-15 மணி இருக்கலாம்! இத்தனையும் நான் நேரில் பார்த்ததுதான்! பிறகு அவர்கள் மேற்குப்புறமாக ஓடிவிட்டார்கள்!

"நான் தாளமுத்துவின் தலைப் பக்கம் கையைப் பிடித்துக் கொண்டே உட்கார்ந்துவிட்டேன்.

"சில நிமிடங்களில் அங்கு முத்துசாமி வாத்தியார் வந்தார்; அவரிடம், 'நீதிராஜன் முதலிய 10 பேர்கள் இப்படிச் செய்துவிட்டார்கள்' என்று சொன்னேன். 10 பேருடைய பெயர்களையும், அவரிடம் சொன்னேன். அப்புறம் வாத்தியார் முத்துசாமி 'தாளமுத்து நிலை மோசமாக இருக்கிறது; நான் முதலில் அவரை ஆஸ்பத்திரிக்குக்கொண்டு செல்கிறேன்; நீ பின்னால் வா' என்று கூறிவிட்டு தாளமுத்துவை கொண்டு போய்விட்டார். நான் அங்குவந்த ஜெயராமனின் சைக்கிள் ரிக்ஷாவில் ஏறி ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்.'

குறுக்கு விசாரணை

டெய்லர் ராஜாவை குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் தரப்பு வக்கீல்கள் குறுக்கு விசாரணை செய்தார்கள்; அப்போது அவர் சொன்னதாவது :—

"கம்யூனிஸ்டு சங்கமான தம்பு தொழிலாளர் சங்கத்துக்கு நடராசன் தலைவர். அருணாசலம் கம்யூனிஸ்டு கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார். நீதிராசன், செந்தூர், செல்லையா, செந்தூர் பாண்டியன், சேசையா, சேவியர் ஆகியோர் சட்டசபைத் தேர்தலில் கம்யூனிஸ்டு கட்சிக்கு வேலை செய்தார்கள்.

"குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கும் தங்கப்பழம், லாரி பெருமாள் போன்றவர்களுக்கும் பழக்கம் உண்டு. கே. வி. கே. சாமி கொலைவழக்கில் இவர்கள் சாட்சிகளைக் கலைத்தது தாளமுத்துவுக்கும் தெரியும். வெட்டப்படுவதற்கு 2 வாரத்துக்கு முன்னால் தங்கப்பழமும், லாரி பெருமாளும் வெட்டுவதற்கு ஏற்பாடு செய்ததாக தாளமுத்துவுக்கும் எனக்கும் தகவல் கிடைத்தது. அது சம்பந்தமாக போலீசில் புகார் செய்யவில்லை.

"நடராசன் தேர்தலில் கம்யூனிஸ்டு கட்சிக்காக உழைத்தார்; நான் சிவசாமிக்கு (தி. மு. க.) உழைத்தேன். நடராசன் 2 வருடத்துக்கு முன்பு தி. மு. க.-வில் இருந்து விலக்கப்பட்டவர்."

இரண்டாவது சாட்சி

இரண்டாவது சாட்சியாக புதியம்புத்தூர் தி. மு. க. செயலாளர் துரைசாமி விசாரிக்கப்பட்டார்; அவர் சொன்னதாவது :—

"22—5—57-ல், நான் தூத்துக்குடிக்குப் போயிருந்தேன். தூத்துக்குடிக்கு வர இருந்த சத்தியவாணிமுத்து அம்மையாரை எங்கள் ஊர்க் கூட்டத்தில் பேசுவதற்கு ஏற்பாடு செய்வதற்காகப் போனேன்.

"நாடக டிக்கெட் விற்கப் போவதாகவும், கூடவந்தால் ஜோசப்பை (தூத்துக்குடி தி. மு. கழக செயலாளர்) பார்த்துவிட்டு வாலாம் என்றும் தாளமுத்து சொன்னார். தாளமுத்துவும், டெய்லர் ராஜாவும், நானும் புறப்பட்டுப் போனோம்; வழியில் காற்றுடி சுப்பிரமணியத்தின் தகப்பனார் மாடசாமி, தாளமுத்துவுடன் பேசினார்.

"பேசியபடியே போய்க் கொண்டிருந்தபோது 'வெட்டு, குத்து' என்று சத்தம் கேட்டது; 10 பேர் கூட்டமாக வந்தார்கள்; அவர்கள் கையில் அரிவாள், கத்தி போன்ற ஆயுதங்கள் இருந்தன.

"தாளமுத்துவை இராமநாதனும், செந்தூர்பாண்டியனும் முதலில் கத்தியால் குத்தினார்கள். வலது கையில் ஒருவர் வெட்டினார். நீதிராஜன் சூரிக்கத்தியால் தாளமுத்துவின் மார்பில் குத்தினார். பிறகு 2 தொடையிலும் 2 பேர் வெட்டினார்கள். டெய்லர் ராஜாவை அதிரசம் என்ற ராஜபாண்டியன் வெட்டினார். அதற்குப் பிறகும் 'வெட்டு குத்து என்று சத்தம் கேட்டது; அப்போது காலை மணி 10-15 இருக்கும்."

சாட்சியை எதிர்தரப்பு வக்கீல்கள் குறுக்கு விசாரணை செய்தார்கள்; சத்தியவாணிமுத்து அம்மையார் 26—5—57-ந் தேதி தூத்துக்குடிக்கு வரவில்லை என்றும் ஜோசப்பை பார்ப்பதற்காக தாளமுத்துவின் உதவியை நாடியதாகவும் தாளமுத்துவை 10 பேரும் வளைத்துக்கொண்டு தாக்கியதாகவும் அது சமயம் பிளாட்பாரங்களில் ஜனங்கள் போய் கொண்டிருந்தார்கள் என்றும் கடைகள் திறந்து இருந்தன என்றும் துரைசாமி சொன்னார்.

மூன்றுவது சாட்சி

மூன்றுவது சாட்சியாக மாடசாமி என்பவர் விசாரிக்கப்பட்டார். மகன் விஷயமாக தாளமுத்துவுடன் பேசிக்கொண்டு சென்றபோது 10 பேர் தாக்கினர் என்று மாடசாமிசொன்னார்.

நீதிராஜன், நடராஜன் ஆகியோரை சாட்சி அடையாளம் காட்டினார்.

வட சென்னையில் தோழர்கள் முழக்கம்

கண்ணதாசன், என். சீவரத்தினம் கலந்துகொண்டனர்

சென்னை, ஆக. 9—

உதயசூரியன் அறிவியல் மன்றத்தின் சார்பில், நேற்று மாலை 6-30 மணிக்கு வண்ணை—ராபின்சன் பூங்கா திடலில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இயக்கப் பாடல்களுக்குப் பிறகு கூட்டம் துவங்கியது. தோழர் எம். கோவிந்தராசலு தலைமை வகித்தார்.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் என். சீவரத்தினம் அவர்கள் 'சுயராஜ்யம் வந்தால் பாலும் தேனும் வழிந்தோடும்' என்று கூறியவர்கள் ஆட்சியில் காணப்படும் அலங்கோலத்தை விளக்கியும், தி. மு. கழகம் சட்டசபையில் ஆற்றிவரும் பணிகளைக் குறிப்பிட்டும், தென்னாட்டில் வடநாடு ஆதிக்கம் செலுத்துவதைக் கண்டித்தும் பேசினார்.

அடுத்து, தோழர் எஸ். எஸ். தென்னரசு பேசுகையில், தி. மு. கழகம் பிறந்து வளர்ந்த வரலாற்றை நினைவூட்டி, 5,000 பேர் சிறை சென்ற மும்முனைப் போராட்டத்தை எடுத்துக்காட்டியதுடன், நமது குறிக்கோளான திராவிட நாடு கிடைக்க நாம் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அடுத்து மாணவர் சத்தியநாதனும், மாணவி சற்குணமும் சிறிது நேரம் பேசினர்.

பின்னர், தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"'சட்டசபையில் தி. மு. கழகம் என்ன செய்கிறது? திராவிட நாட்டுப் பிரிவினை குறித்து வற்புறுத்த இவர்கள் என்ன செய்தார்கள்?' என்றெல்லாம் 'பெருந் தலைவர்கள்' எனத் தங்களை நினைத்துக்கொண்டிருப்பவர்கள் கேட்கிறார்கள்; அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வேன் — திராவிட நாட்டைப் பிரிக்கும் அதிகாரம் இந்த நாட்டு மந்திரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டில்லை. சாதாரணமாக, இந்த நாட்டில் ஏதேனும் தொழில்கள் ஏற்படுத்த வேண்டுமென்றால்கூட அதற்கு அதிகாரம் இல்லாமல் திண்டாடுகிறார்கள் நமது அமைச்சர்கள். எல்லா அதிகாரமும் டில்லியில் தான் இருக்கிறது.

"வைகுண்டத்திற்குப் போக நினைக்கும் வைணவர்களும், சிவலோகத்தில் இடம் பிடிக்க நினைக்கும் சைவர்களும் பஜனை பாடுவதுபோல, நாமும் சட்டசபைக்குச் சென்று நுழைந்தவுடனேயே 'திராவிட நாடு—திராவிட நாடு'—என்று ஜபித்துக் கொண்டிருந்தால் திராவிட நாடு கிடைத்துவிடுமெனச் சில 'மாபெரும்' தலைவர்கள் நினைக்கிறார்கள்.

"திராவிட நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கும் அதிகாரம் காமராசர் கையிலும், சுப்பிரமணியம் கையிலும் இல்லை; அப்படி இருந்தால் இவர்களை மிரட்டியே வாங்கிவிடலாமே! எதற்கெடுத்தாலும் டில்லியை எதிர்பார்த்து கையை விரிக்க வேண்டியவர்களாக அல்லவா இவர்கள் இருக்கிறார்கள்!

"சட்டசபையில் நாம் நுழைந்தவுடனே சட்டசபை எப்படியிருக்கிறது என்பதை நேரில் பார்த்தவர்கள் நன்றாக அறிவார்கள். முன்பெல்லாம் சட்டசபை நடந்து கொண்டிருக்கும்போது வேறு எதெதிலோ கவனஞ்செலுத்திக் கொண்டிருப்பார் காமராசர்; இப்பொழுது அண்ணா பேசுகிறார் என்றால் அவர் சட்டசபையை விட்டு வெளியே போவதே இல்லை.

"எனவே, நம் திராவிட நாடு கொள்கைக்கோ, கட்சிக்கோ எந்தவித நஷ்டமும் ஏற்பட்டுவிடவில்லை."

அடுத்து தோழர் கண்ணதாசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"ஒரு இயக்கம் நன்றாக வளர்ந்திருக்கிறது என்பதற்குச் சான்று என்னவென்றால், அவ்வியக்கத்தைப் பற்றியே எல்லோரும் பேசுவார்கள். இன்றைக்குத் தி. மு. கழகத்தைப் பற்றிப் பேசாதவர்களே கிடையாது; இதுவே நம் வளர்ச்சிக்கு அறிகுறி.

"'சட்டசபையில் 15 பேர் இருந்தால் போதுமா?' என்கிறார்கள் சிலர்; நம் கழக உறுப்பினர்கள் 15 பேரும் நல்ல செயலாற்றும் திறம்படைத்தவர்கள்."

தோழர் கண்ணதாசன் மேலும் தொடர்ந்து பேசுகையில், இந்தியப் போரின் ஆதிக்க வெறியைக் கண்டித்தும், நேருவின் சனநாயக அலங்கோலத்தை விளக்கியும், இந்தித் திணிப்பைக் கண்டித்தும், தமிழின் சிறப்பை விளக்கியும், எஸ். ஏ. பி. போலீஸ்காரர்களுடைய இன்னல்களை எடுத்துக்கூறி அதற்குப் பரிகாரம் தேட வேண்டும் என்றும் கோரினார்; இறுதியில் பல கேள்விகளுக்கு தக்க பதிலுரைத்தார்.

தலைவர் முடிவுரை கூறிய பிறகு நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கடல் பாசியிலிருந்து

புரதச்சத்து கண்டுபிடிப்பு

பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் விசேட வகையான கடல் பாசிகளைத் தங்கள் சோதனைக்கூடங்களில் வளர்க்கிறார்கள்; கடல் பாசிகளிலிருந்து புரதச்சத்து எடுக்க வேண்டும் என்பது அவர்களது நோக்கம்.

இரசாயன உரம் போட்டால் இந்தப் பாசிகள் மிகவும் அதிகமாக வளர்கின்றன என்று அவர்கள் சோதனை செய்து கண்டு பிடித்திருக்கிறார்கள்.

கேட்டீரா, சேதி!

அதிக உரோமமும் மாமிசமும் அளிக்கக்கூடிய ஆடுகளை உற்பத்தி செய்யும் திட்டத்தை விஞ்ஞானிகள் கையாளுகின்றனராம்!

மாமிசம் அதிகமாக அளிக்கும் 'சௌத்டேல்' என்னும் இனத்துடன் நல்ல உரோமம் அளிக்கும் கொலம்பியா இனத்தைக் கலக்க அவர்கள் எதிர்பார்க்கின்றனர். பலனை எதிர்பார்க்க ஐந்தாண்டுகள் ஆகுமென விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

கோட்டயம் — கொல்லம் இரயில் பாதை

இந்த ஆண்டு இறுதியில் தயாராகிவிடும்

சென்னை, ஆக, 10—

கோட்டயத்திலிருந்து கொல்லம்வரை 59 மைல் நீள இரயில் பாதை அமைப்பு வேலை ரூ. 3.65 கோடி செலவில் துரிதமாக நடைபெற்றுவருவதாகவும், இந்த ஆண்டு இறுதியில் போக்குவரத்து ஆரம்பமாகிவிடும் என்றும், தெரிய வருகிறது.

அந்தப்பாதை, எர்ணாகுளத்தையும்—கொல்லத்தையும் இணைக்கும் 96 மைல் நீள இரயில் பாதையின் இரண்டாம் கட்டமாகும். எர்ணாகுளத்தையும்—கோட்டயத்தையும் இணைக்கும் முதல் கட்டமான 37 மைல் நீள இரயில் பாதை ரூ. 9.35 கோடி செலவில் அமைக்கப்பட்டு, ஏற்கனவே போக்குவரத்து நடைபெற்றுவருகிறது என்பது தெரிந்ததே.

சோஷலிஸ்டுகள் போராட்டம்

8 பெண்கள் கைது

சென்னை, ஆக. 13—

நேற்றுமாலை சென்னை மின்சார இலாகா அலுவலகத்தின் முன் 8 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் சென்னைக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கப்படவேண்டும் என்றும், மற்றும் சில கோரிக்கைகளையும் வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். அவர்கள் சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா — பிரிட்டன் வர்த்தகம்

இவ்வாண்டு சனவரி—ஜுன் மாதங்களில் இந்தியா இறக்குமதி செய்த பிரிட்டிஷ் பொருள்களின் மதிப்பு 9,44,62,738 பவுன்; பிரிட்டன் கொள்முதல் செய்த இந்தியச் சரக்குகளின் மதிப்பு 8,81,67,561 பவுன்.

தி.மு.க. கூட்டமும் மக்கள் மன்றமும்

அண்ணா அரும் விளக்கம்

4—8—57-ல் சென்னை மூலக்கொத்தளத்தில் அம்பேத்கார் நினைவு மன்றம்—கே. வி. கே. சாமி படிப்பகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் பேருரையாற்றியபோது, மக்கள் மன்றத்திற்கு அண்ணா அவர்கள் தந்த விளக்கமொன்று இங்கு தரப்படுகிறது :—

"ஒரு கூட்டத்தில் 4, 5 பேர்கள் பேசுவதை நீங்கள் வரவேற்கவேண்டும். அத்தகைய நல்ல வாய்ப்பானது நமது கூட்டங்களில் ஏற்படுவது உண்மையில் கேட்பவர்களுக்கு நல்ல இலாபத்தையும் பயனையும் உண்டாக்கும். ஏனென்றால், பலர் பேசும்போது, ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்சினையைப் பற்றி விரிவாகப் பேசவும், பல துறையில் பல கோணங்களிலிருந்து விஷயத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்லவும் முடியும். ஒருவரே பேசினால் இந்த நன்மைகள் உங்களுக்குக் கிடைக்காது.

"பிறர் பேசும்போது அவர்கள் பேசுவதை நான் கேட்கின்ற நேரத்தில், அவர்களின் பேச்சு என் சிந்தனையைக் கிளறும்; எனக்குப் புதிய எண்ணங்கள் தோன்றக்கூடும். அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கவனித்து, நான் வேறு பல நல்லவைகளை உங்களிடம் பேச முடியும்.

"எப்படி ஒரு நல்ல பாட்டுக் கச்சேரிக்கு நல்ல பக்கவாத்தியம் அவசியமோ, அப்படியே கூட்டத்திலும், பலர் பேச வேண்டியது அவசியம்.

"ஆனால் நீங்கள், 'பிடில்' வாசிப்பதை நிறுத்தச் சொல்கிறீர்கள்; 'தம்பூரா' மீட்டுபவரை வேண்டாம் என்கிறீர்கள்; 'மிருதங்கம்' வாசிப்பவரை கூடாது என்கிறீர்கள்; 'தாளம்' போடுபவரை ஆகாது என்கிறீர்கள்; வெறும் பாட்டை மட்டும் கேட்கிறேன் என்கிறீர்கள்; உங்களுக்கு நல்ல சங்கீத இரசனை இல்லை என்றே வருத்தத்துடன் கூற விரும்புகிறேன்.

"இனி நமது கூட்டங்களிலும், மற்ற இடங்களிலும் யார் பேசினாலும் கேட்க வேண்டும்; மற்றவர்களுக்கும் பேச வாய்ப்பளிக்க வேண்டும்.

"நீங்கள் நினைக்கலாம் — 'அண்ணா பேசுவதற்கு நேரமிருக்காது; சுருக்கமாக பேசிவிடுவார்' என்று! அது தவறு; நான் பலமுறை இதை உங்களிடம் கூறியுள்ளேன்—பேச வேண்டிய முக்கிய பிரச்சினைகள் இருக்கும்போது நானாகவே, யாரும் கூறாமல் நீண்டநேரம் பேசுவேன்; அந்தச் சந்தேகத்திற்கு இடம் தராதீர்.

"நீங்கள் பலரைப் பேச விடாமல் தடுத்தால், எனக்கும், 'அவர்கள் என்ன பேச இருந்தார்கள்?' என்பது தெரியாது; நானும் அதைப் பற்றிப் பேசுவேன் என்று எதிர்பார்த்துப் பயன் இல்லை.

"எனக்குத் தோன்றாத சில பிரச்சினைகள் அவர்களுக்குத் தோன்றியிருக்கக்கூடும். அதை நீங்கள் கேட்காமல் தடுப்பதால் யாருக்கு நஷ்டம்? எனவே, இனி நீங்கள் தயவு செய்து இந்த முறையைப் பின்பற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"அதோடு, 'யார் அழகாகப் பேசுவார்கள்?' என்று எதிர்பார்ப்பதைவிட்டு யார் விளக்கமாக விஷயத்தைக் கூறுகிறார்கள் என்பதை நீங்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

"நாம், 'நன்றாகப் பேசுபவர்—அழகாகப் பேசுபவர்'—என்ற நிலையை நாட்டில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியதில்லை; அது மக்கள் அறிந்த ஒன்று; மற்றக் கட்சிகள் மறுக்காத ஒன்று; எனவே, இனி கூட்டங்கள் நல்லபடி பயன்படும் வகையில், பலர் பேசும்போது, எடுத்துக் கூறப்படும் புதிய கருத்துக்களைக் கேட்பதுடன், நல்ல சூழ்நிலையையும் புதியதோர் முறையையும் நீங்கள் பின்பற்ற வேண்டும்."

3,000 கைதிகள் விடுதலையாயினர்

ஆக. 15, 16-ந் தேதிகளில் தூக்குத்தண்டனை நிறைவேறாது

சென்னை, ஆக. 13—

சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழாவையொட்டி சென்னையில் மொத்தம் 3,000 கைதிகள் விடுதலை பெற்றுள்ளனராம்!

ஆகஸ்டு 15, 16-ந் தேதிகளில் தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்படமாட்டாதாம்!

இராணுவ நீதிமன்றங்களில் தண்டிக்கப்பட்டவர்களுக்கும், அரசியல் கைதிகளுக்கும், அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை காலத்தில் எந்தவித மாற்றமும் அரசாங்கம் செய்யவில்லை என்றும் தெரியவருகிறது.

மன்றோ சிலையை தகர்க்க முயற்சி

வெடிகுண்டுடன் ஒருவர் கைது

சென்னை, ஆக. 13—

செயிண்ட்ஜார்ஜ் கோட்டையிலிருந்து, ஐலண்டு திடல் பக்கம் போகும் சாலையிலுள்ள மன்றோ பிரபுவின் சிலையைத் தகர்த்தெறிய முயன்றதாக கண்ணன் என்கிற கன்னையனை, இந்திய ஆயுதச் சட்டம் 19—ஏ. பி. பிரிவுகளின் கீழும், வெடிமருந்துச் சட்டத்தின் 3, 5 பிரிவுகளின்கீழும் போலீசார் கைதுசெய்துள்ளனர்.

கண்ணன் 'பார்வர்ட் பிளாக்' கட்சியின் அனுதாபி என்று சிலர் கருதுகின்றனர்.

அவர் 6—8—57 வியாழன் காலையில் வெடிகுண்டுகளுடன் சிலையருகில் கைது செய்யப்பட்டுள்ளார். பிறகு பூங்கா நகரில் ஒரு வீட்டில் இரண்டு வெடிகுண்டுகளையும், அதைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கருவிகளையும் போலீசார் கைப்பற்றியுள்ளனர்.

வெல்லிங்டன் பிரபுவின் சிலை அகற்றப்பட்டது

சென்னை, ஆக. 13—

சென்னை—மவுண்ட் சாலையில், வெலிங்டன் பாலத்திற்கு அருகே ஜிம்கானா கிளப்பிற்குப் போகும் வழியிலுள்ள வெல்லிங்டன் பிரபுவின் உருவச் சிலை, நேற்று இரவு அங்கிருந்து அகற்றப்பட்டது.

இந்தச் சிலை இனி அரசாங்க பொருட் காட்சிச்சாலையில் வைக்கப்படும்.

1919-லிருந்து 1924 வரை அவர் சென்னை கவர்னராக இருந்திருக்கிறார்.

ஆந்திர அரிசி வியாபாரிகளின் சமூக விரோதப் போக்கு

மக்கள் சபையில் உணவு மந்திரி கண்டனம்

கட்டாயக் கொள்முதல் செய்ய உத்தேசம்

புதுடில்லி, ஆக. 12—

"ஆந்திராவில் சில அரிசி மில் முதலாளிகளும், வியாபாரிகளும் மிகமிக சமூக விரோதமான போக்கில் நடந்துகொள்கின்றனர்"

என்று மக்கள் சபையில், உணவு மந்திரி அஜித் பிரசாத் ஜெயின் கூறியிருக்கிறார்.

"எனவே, இதன் விளைவாக, சர்க்கார் அங்கு உணவுத் தானியங்களை இனி சட்டாயமாக்க கொள்முதல் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது; இன்னும் சில நாளில் சர்க்கார் கட்டாயக் கொள்முதல் வேலையைத் துவக்கும்"

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

என். ஜி. ரங்காவின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், மேலும் அந்த மந்திரி, தென் உணவு மண்டலம் அமைத்தான பிறகு, ஆந்திர வியாபாரிகள் கேரளம், மைசூர், சென்னை ஆகிய மாநிலங்களுக்கு அரிசி அனுப்பவே இல்லை என்றும், அவர்கள் அரிசிதரத் தயாராயிருந்தாலும், நியாய விலைக்குத் தர முன்வரவில்லை என்றும் எனவே, சர்க்காரே அவர்களிடம் நியாய விலைக்கு கட்டாயக் கொள்முதல் செய்யப் போவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

★

முதல் திட்டத்தால்.....

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விடப்பட்டு வீணாக முன்போல கடலுக்குப் போய்விழுகிறது.

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய அரசாங்கம் வடநாட்டில் பெரிய பெரிய அணைக்கட்டுகளைக் கட்டியது. அதையொட்டி, தேங்கிய தண்ணீரைப் பிரித்துக் கொடுக்க கால்வாய்கள் வெட்டப்படவில்லை; கால்வாய்கள் அமைத்துத் தண்ணீர்வந்தாலும் உயர்ந்த தீர்வைகளின் காரணமாக உழவர்கள் அந்த வசதியை உபயோகிக்க மறுக்கின்றனர். இதுதான் இன்றைய நிலை.

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 569 கோடி செலவிடப்பட்டது.

"திட்டத்தின்படி பெரிய அணைக்கட்டுகளின் மூலம் 85 இலட்சம் ஏகரா நிலங்களை பயிர்த்தொழிலுக்குக் கொண்டு வரலாம் என எதிர்பார்த்தார்கள்.

"திட்டத்தின் முடிவில், 85 இலட்சம் ஏகரா அல்ல—63 இலட்சம் ஏகரா நிலங்களுக்குத்தான் தண்ணீரும் வசதிகளும் கிடைக்குமென்று சொன்னார்கள்.

"கடைசியாக புது அணைக்கட்டுகளின் மூலம் எவ்வளவு ஏகரா நிலங்கள் உண்மையாகவே பயிர்த்தொழிலுக்கு உதவப்பட்டன என்று பார்த்தால், 40 இலட்சம் என்று கூறப்படுகிறது.

"மொத்தம் செலவான ரூ. 569 கோடிக்கு எதிர்பார்த்த பலனில், கடைசியாக ரூ. 268 கோடி அளவுக்குத்தான் பலன் கிடைத்திருக்கிறது, பாக்கி ரூ. 301 கோடி அளவுக்கு நாம் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை!

"திட்டங்களுக்காகப் போடப்பட்ட பணம் பெரும்பாலும் செலவாகிவிட்டது. ஆனால் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கவில்லை.

"திட்டங்களைப் போட்டு பலன் உண்டாக்குவதுடன், அந்த பலன்களைச் சாதாரண மக்களும் பெருமளவுக்குச் செய்ய வேண்டும். இதற்கு, வாங்கு சக்தி எல்லாப் பகுதிகளிலும் எல்லா மக்களுக்கும் ஒரே சீரான அளவில் பரவியிருக்க வகை செய்யவேண்டும். இல்லாவிட்டால், மாடியைக் கட்டி அங்கு போக வழியில்லாத வீட்டைப் போல, நாட்டின் பொருளாதாரம் ஆகிவிடும்"

உணவுப் பொருள் விலை ஏற்றம்

மந்திரி கூறும் காரணங்கள்

புதுடில்லி, ஆக. 12—

"உணவுப் பொருள்களின் விலை, கையிருப்பிலுள்ள உணவுப் பொருள்களின் அளவை மட்டும் பொறுத்தது அல்ல; நாட்டில் புழக்கத்திலிருக்கும் பணம் மற்றும் இதர அம்சங்களையும் பொறுத்ததாகும், பண்டங்களின் விலை; விரிவாகிவரும் பொருளாதார நிலைகளுக்கொப்ப விலைவாசிகளும் ஏறத்தான் செய்யும்"

என்று மத்திய உணவு மந்திரி அஜீத் பிரசாத் ஜெயின் மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

உணவு உற்பத்தி அதிகரித்திருந்தும் உணவுப் பொருள் விலை ஏறிக்கொண்டிருக்கிற இந்த முரண்பாடான நிலைக்கு அடிப்படையான காரணம்தான் என்ன என்று ஒரு உறுப்பினர் கேட்டபோதுதான் அவர் மேற்கண்ட பதிலைத் தந்திருக்கிறார்.

இப்போதைய உற்பத்தியை விட இன்னும் கொஞ்சம் உணவு உற்பத்தியாகியிருந்தால், மேலும் விலை ஏற்றத்தைத் தடுத்திருக்க முடியும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்தியப் பேரரசு

தன்மான உணர்ச்சி பெறுகிறது

கருப்புச் சட்டம் ரத்து

புதுடில்லி, ஆக. 13—

அத்தியாவசிய சர்வீசுகளில் பணியாற்றும் ஊழியர்களின் உரிமைகளைப் பறித்து, அடக்கி ஆளும் நோக்கத்துக்குத் துணையாக இயற்றப்பட்ட அவசரச் சட்டத்தை இந்திய மக்கள் தலைவர் இராசேந்திர பிரசாத் ரத்து செய்துவிட்டார்.

இதுபற்றிய உத்தரவு நேற்று மாலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருக்குறள் வகுப்பு

14-8-57 மாலை 6-30 மணிக்கு சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை மணவழகர் மன்றச் சார்பில் முருகேச முதலித் தெரு 2-ம் எண்ணுள்ள இல்லத்தில் திரு. கா. சி. தனக்கோட்டி அவர்களால் திருக்குறள் வகுப்பு நடத்தப்படும்.

சென்னையில் 'அண்ணா நகர்'

வளர்ச்சிக் கழக செயற்குழு அமைப்பு

சென்னை, ஆக. 12—

அண்ணா அவர்கள் பெயரில் கோடம்பாக்கம் இரயில் நிலையத்திற்கு அண்மையில் அமைக்கப்பட இருக்கும் அண்ணா நகர் எல்லைக்குள் வீடு கட்டுவதற்கான மனைகள் வாங்கியிருப்பவர்களின் கூட்டம் ஒன்று, கோடம்பாக்கம், டிரஸ்ட்புரம், புத்தா பிக்சர்ஸ் கட்டடத்தில் 7—8—57 மாலை 5-மணிக்கு நடைபெற்றது. பல தோழர்கள் வந்திருந்தனர். வந்திருந்தவர்களில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், காஞ்சி-மணிமொழியார், சத்தியவாணிமுத்து, எம். எல். ஏ., கா. அப்பாதுரையார், அலமேலு அப்பாதுரை, டைரக்டர் பீம்சிங் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அதுபோது, அண்ணா நகர், வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டு தோழர்கள் ஏ. பீம்சிங் தலைவராகவும், சி. ஜி. சுந்தரம், சத்தியவாணிமுத்து எம். எல், ஏ. இருவரும் துணைத் தலைவர்களாகவும், அண்ணா நகர் அமைப்பாளரும் 'போர்வாள்' ஆசிரியருமான காஞ்சி-மணிமொழியார் செயலாளரும் பொருளாளருமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததை அங்கீகரிக்கப்பட்டது.

கழக சட்டதிட்டங்களை முடிவு செய்யவும், உறுப்பினர் சேர்க்கவும், அண்ணா நகர் படம் வரைந்து கார்ப்பரேஷன் அனுமதி பெறவும், மற்ற முக்கியமான எல்லா வேலைகளையும் பார்க்கவும் தலைவர், செயலாளர், இரா. நெடுஞ்செழியன், சத்தியவாணிமுத்து, அலமேலு அப்பாதுரை, சி. ஜி. சுந்தரம், வ. சங்கரநாராயணன் ஆகிய எழுவர் அடங்கிய துணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.